ஓலை 31 | ஓசை 123 | சனவரி 2023

# அகர முதல இலக்கிய பேரவை



## கவிதை வார இதழ்

தமிழ்ப்பணியில்: அகர முதல இலக்கிய பேரவை (ம) சிவம் அறக்கட்டளை

# தினம் ஒரு திருக்குறள்



**சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம் அதனால்**
**உழந்தும் உழவே தலை.**

உலகம் பல தொழில் செய்து சுழன்றாலும் ஏர்த் தொழிலின் பின் நிற்கின்றது, அதனால் எவ்வளவு துன்புற்றாலும் உழவுத் தொழிலே சிறந்தது.

**Translation:**

Howe'er they roam, the world must follow still the plougher's team;
Though toilsome, culture of the ground as noblest toil esteem.

**Explanation:**

Agriculture, though laborious, is the most excellent (form of labour); for people, though they go about (in search of various employments), have at last to resort to the farmer.

/Aagaramuthalaa

அகர முதல இலக்கிய பேரவையில்
இணைய-9597887847

நிர்வாக குழு

கு.செல்வமுத்துக்குமரன்

சிவம் அறக்கட்டளை

ஆசிரியர்கள்

அ.வில்சன்

குமர.தர்மசீலன்

வடிவமைப்பு

அ.வில்சன்

அலுவலக முகவரி

97, குஞ்சிதபாதம் நகர், டவுன் ஸ்டேசன் தென்புறம்,
மயிலாடுதுறை - 609001

அகர முதல இலக்கிய பேரவை

Aagaramuthalaa www.அகரமுதல.com aagaramuthala@gmail.com

# பொங்கல் திருநாள்

பொங்கல் திருநாளாம் திருநாளே!
புதுப்பானை, புது பச்சரிசி, கரும்பு, பழங்கள், மஞ்சள்
புத்தாடை, மாக்கோலம் போட்டு சூரிய தேவனை
வரவேற்கும் தைத் திருமகளே வருகவே!
தை பிறந்தால் வழிபிறக்கும் என்பார்களே!
ஆஹா! தை மகள் சுபகிருது ஆண்டில்
பட்டொளி வீசியே வருகிறாளே!
இனி பிணி,மூப்பு, சாக்காடு இல்லா வாழ்வு
ஏழைக்கும், செல்வந்தனுக்கும் புது உற்சாகமே!
ஏற்ற மிகு வாழ்வு இனி ஏழைக்கு, இல்லையே,
சென்றிடுவான் ஏற்றமுடனே,
போகியும் நமக்கு போனதால்
தைப்பொங்கலும் வந்ததே
உழைத்த கால் நடைக்கும் பொங்கலே
உழைக்கும் வர்க்கத்தினருக்கும் திருநாளே
தெய்வப் புலவராம் திருவள்ளுவ
பெருந்தகையின் வைரத் திருநாளே
ஜல்லிக்கட்டு தடையை மீறி வென்றான் தமிழன்.
எங்கும் மகிழ்ச்சி, புது வெள்ளம்
கவலைகளை மறப்போம்,
கனிவுடனும் புதுப்பொலிவுடனும் பெற்று
வெல்வோம் பாரினில்.
அகர முதல பேரவை நல்நெஞ்சங்கள்
அனைவருக்கும் இனிய பொங்கல் நல்வாழ்த்துக்கள்.



கவிஞர் கிருஷ்ணவேணி.ஆ,ஊத்தங்கரை

# வலிகளே வழியாக

வாழ்க்கை என்ற அனுபவம்
வலிகள் மூலம் கிடைத்திடும்
வாழ்ந்து பார்க்க நீயுமே
வலியும் வழியாய் மாறிடும்

ஆழ்ந்து பெற்ற பாடமும்
அறிவை வளர்க்கச் செய்யுமே
தாழ்வு நிலையில் தள்ளினும்
தடங்கள் அமைத்துச் செல்லுமே

தோல்வி உன்னைத் தீண்டினால்
துவண்டு நீயும் வீழ்வதா?
தோல்வி சொல்லும் அறிவுரை
தூங்கும் முயற்சி எழுப்பவே



இழப்பு கூட செதுக்கிடும்
இன்னும் இன்னும் வலிமையை
உழுத நிலத்தை போலவே
உன்னை ஆற்றுப் படுத்துமே

துன்பம் வந்து துரத்தையில்
துணிவு பிறந்தால் வெற்றிதான்
என்றும் இதனை நம்பினால்
ஏற்றம் காணும் வாழ்வுதான்

இன்பம் என்ற மலரதன்
ஈர வேரோ இடர்களே
வென்று காட்டும் வெறியினை
விதைக்கும் பட்டத் துன்பமே

கவிஞர் பூர்ணிமா சங்கர், கோயமுத்தூர்

# ஹைக்கூ

## ஹைக்கூ

புகைப்படம்
அழகாக இருக்கிறது
குரங்கின் செயல்



## சென்ரியு

சுவரொட்டி இல்லா
நேரடி காணிக்கையில்
காலி உண்டியல்கள்

## லிமரைக்கூ

கடவுளுக்கு உணவு
குரங்குக்கு இல்லை
சுயநலக் கனவு

## லிமரிக்

குரங்கை கடவுள் படைத்தான்
மனிதன் குரங்கில் பிறந்தான்
பரிணாம வளர்ச்சி
பாதையின் தொடர்ச்சி
கடவுளின் குரங்கை மறந்தான்

கவிஞர் அன்னலெட்சுமி சரவணன்,ஈரோடு

# மலரட்டும் தமிழ்மொழி

வள்ளுவனுக்கு காவியை
வாரிவாரி இறைக்கட்டும்
குள்ளநரி சிங்கம் போல
கூவிக்கூவித் திரியட்டும்

அடையாளத்தை அத்துமீறி
அற்றுவிட நினைக்கட்டும்
கடைத் தேங்காயெடுத்தே
கணபதிக்கு உடைக்கட்டும்.

ஆணிவேரை பிடுங்கி எறிய
ஆசைபட்டுப் போகட்டும்
மேனி மேலே அரிதாரம் பூசி
மேடை நாடகம் போடட்டும்.



இவையாவையும் சமாளித்து
இயற்றமிழ் இயங்கட்டும்
எதிரிகளைத் தூள்தூளாக்கி
எழுச்சியோடு உயரட்டும்.

காலச்சக்கரம் சுழலும்வரை
கனிமொழி கனியட்டும்
தொன்மைகளை மெருகேற்றி
தொய்வில்லாமல் தொடரட்டும்.

உயர்தனிச் செம்மொழி
உயிர்ப்புடன் மலரட்டும்
சூரியனாய் தினந்தினம்
சுதந்திரமாய்ப் புலரட்டும்.

கவிஞர் மதுரகவி,மதுரை

# திருக்குறளுக்கு தன்முனைக் கவிதைகள்



01. கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக

கசடறக் கற்கிறேன்
அதன்பின் நிற்கிறேன்
கல்லடிகளால் தழும்புகள்
ஆனாலும் பழுமரமாய்

2) அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே யுலகு

எழுத்துக்கு அ
உலகுக்கு கடவுள்
எனக்கு நீ
நமக்கு நம் குழந்தைகள்

3) தீயினாற் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே
நாவினாற் சுட்ட வடு

உன்வார்த்தை தீக்குச்சிகளால்
நொய்மையில் மனம்
தீப்புண் ஆற்றிடுவேன்
மாறா வடுவாய் மனப்புண்

கவிஞர் ராஜூ ஆரோக்கியசாமி,திருச்சி

# புன்னகையின் புதைகுழியென

ஒரு புன்னகையை ஏந்திக் கொண்டு
உலகினைச் சுற்றுகிறேன்
பூத்திட்ட மலர்களைக் கண்டதும்
இரட்டிப்பாகிறது அதன் உயிர்
மலையின் மேனியில் மேகத்தைக் கண்டு
குதியாட்டம் போடுகிறது
இலை நுனியில்
பனியெனக் கிடக்கும்
மழையைக் கண்டு
எண்ணச் சிறகில்
குளிரைத் தாலாட்டுகிறது
அன்னைத் தாலாட்டில் அயர்ந்துறங்கும்
மழலையைக் கொஞ்சி
ஆற்றலை நீட்டிக்கிறது
ஒளிரும் சூரியனில்
உற்சாகத்தை வாங்கியபின்
சுழலும் பூமியைக் கண்டது
விரைவுப் பயணத்தில்
சாலையை நிறைக்கும்
வாகனங்களைக் கண்டு
அஞ்சத் தொடங்கியது புன்னகை
காணும் உயிர்களிடத்தில்
கருணையை விதைத்து வந்த புன்னகை
உதட்டுக்குள் ஒளிந்து கொண்டது
கண்டும் காணாமல் கடந்து சென்ற
மனிதர்களைக் கண்டதும்



கவிஞர் இளையவன் சிவா,மடத்துக்குளம்

# மழையின் நடனம்

கருமேகங்கள்
விண்ணில்
இணைந்து
கதிரவனை
மறைத்தன.

நிலமகளை
முத்தமிடப்
போட்டி
போட்டன.

மேகங்கள்
உரசின
மின்னல்
கொடிகள்
படர்ந்தன.

பேரொலி
பேரொளி
இரண்டும்
ஒரே நேரத்தில்.

மழையம்புகள்
நேர்த்தியாய்
மண்மகளைத்
தைத்தன.

இயற்கையின்
உன்னதம்
உன்மத்தம்
ஆக்கியது
காண்போரை

நீர்க்குமிழிகள்
தாளமிட
பெயல் நிலம்
செம்புலமாக்கிட

மரக்கிளையின்
இலைகளில்
தூசிகள்
துடைக்கப்பட

சுகமாய்ச்
சுவாசித்து
காற்றோடு
கை குலுக்கின.

சாலையில்
நடப்போர்
குடையேந்தி
நடந்திட

மழையின்
நடனம்
விரித்த
குடையில்.

குடையேந்திய
குமரியோ
சில்லென்ற
காற்றில்
சில்லிட்டாள்.

சாலையில்
நுரை முத்துகள்
தெறித்து
உருண்டோடின.

மழை
ஓய்ந்திட
விடியலில்
பனி மூட்டம்.

பனியை
விலக்கிட
பகலவனே
விரைந்தேகினான்.

மண்மகளும்
குளிர்ந்தாள்.
குதூகலத்தில்
வயலில்
ஊன்றிய வித்துகள்

மண்ணைப்
பிளந்து
வெளியே
எட்டிப்பார்த்தன!

புள்ளொலி
கேட்டு
பரவசமானது
நெஞ்சம்.

மழைத்துளிகள்
மண்ணுயிர்களை
மகிழ்வித்து
மகிழ்ந்தன.

சலசலத்து
ஓடிய நீர்
தடைகளைத்
தாண்டி
தனக்கென
பாதை வகுத்து
தான் பிறந்த
கடலினில் கலந்தது.

கவிஞர் செ.கலைவாணி,மேட்டூர் அணை

# களியாட்டம்

காற்றின் போக்கிற்கு
அசையும்
மரக்கிளைகளில்
ஏறி இறங்குவதாய்
இருக்கிறது
காதல் வயப்பட்ட
இரு அணில்கள்.



கிளைகள்
அதற்கு உடன்படுவதாய்
இல்லாமல் போனாலும்
காதல் களியாட்டத்தை
நிறுத்துவதாய் இல்லை
அணில்கள்.

இதைப்
பார்த்தபடி இருந்த
நானும் அவளும்
காதல் வயப்பட்டுப் போனோம்.

எங்களின்
அனுமதியின்றி
நாடி நரம்புகள் வழியே
காதல் களியாட்டத்தில்
ஏறி இறங்கத் தொடங்கின
எண்ணற்ற அணில்கள்.

கவிஞர் பாரியன்பன் நாகராஜன், குடியாத்தம்

# ஒத்திகை

பழைய சோறும் நீரும் ஒத்திகை பார்க்குது
விடியலில் பசிக்கு பருகும் ஏழைக்காக!

இடியுடன் காற்றும் மின்னலுடன் ஒத்திகை பார்க்குது
விரைந்து வரும் மழைக்காக!

மழையும் மண்ணும் ஒத்திகை பார்க்குது
விவசாயிக்கு கிடைக்கும் விளைச்சலுக்காக!

உழைப்பும் வியர்வையும் ஒத்திகை பார்க்குது
செய்திட்ட பணிக்கு கூலி பெற்றிடவே!

உயிரில்லாதவைகள் ஒன்றுடன் ஒன்று ஒத்திகை பார்த்திட
நன்மை விளையுது எந்நாளும்!

உடமை உள்ள மனிதர்கள்
பணத்தினை மட்டும் வைத்து ஒத்திகை பார்ப்பதும் ஏனோ?

விடையறியாக் கேள்விகளும் வந்திடவே
ஒத்திகை செய்திட ஏதுமின்றி



அற்ப மனிதர்களும் இல்லாதவராய்
ஏங்கிடும் ஏக்கமதை தீர்த்தே

நல் மாந்தரின் மனதினை மட்டும்
ஒத்திகை பார்த்து மகிழ்வாய் வாழ்ந்திடுவோம்!

கவிஞர் இரா.கோமதி,பொள்ளாச்சி

# அன்பு




அன்பு என்பது
வெறும் வாய்ச்சொல் அல்ல
மாறாக அது
பார்க்கும் பார்வையின் விம்பம்
ஓடும் குருதியின் அங்கம்
துடிக்கும் இதயத்தின் சத்தம்

கவிஞர் அகிலா ஜவுபர்,ஏத்தாளை புத்தளம்(இலங்கை)

# தேன் தேனீ

பசை ஒட்டிய கால்கள்
திசை எட்டும் பரவி
இனப்பெருக்க தூதுவன் தேனீ
தென்றல் காற்றில சாரல் வீச
ஈக்கள் கலையா
தேனின் சுவையும் குறையா
புயலும் வீச
ஈக்கள் கலையா
அதிலும் அடை காத்து சுவை குறையா
கசக்கும் மலரும் தேனும் சுவையும் சேரும் இடமும்
இனிக்கும் தேன் மழையா
மகரம் தொட்டு துகளும் எடுத்து
இனத்தை பெருக்கி
பூக்கள் மலர்ந்து ஈக்கள் விரைந்து
தேனெடுக்கும் சுயநல உயிரி தேனீ



கவிஞர் இர மணிகண்டன்,வங்கனூர்

# அருளுடைமை

(அதிகாரம் : 25)

அறியாமை அகற்றி
அடுத்தவர் நலன்கருதுதலே.
அன்புகொண்ட மனங்களில்
வாழும் அருளுடைமையாம்.

அருளாகிய பெருஞ்செல்வமே
அறிவாளிகளிடம் இருக்கும்.
அல்லாத பிறசெல்வங்கள்
இழிந்தவரிடமும் கிடைக்கும்.

நல்வழியை ஆராய்ந்து
அருளாளராய் திகழ்தலே.
செல்லும் வழிகளிலெல்லாம்
உயிர்க்கு உறுதுணையாகும்.

அறியாமை இருள்சூழ்ந்த
துன்பமான வாழ்க்கை.
அருள்பொருந்திய நெஞ்சத்தார்க்கு
ஒருபோதும் இல்லாதாகும்.

உலகினோர் உயிர்காக்கும்
அருள்புரிந்து வாழ்வோர்க்கு.
தம்முயிர் குறித்து
அஞ்சும் தீவினையில்லாதாம்.

அருளுடையார்க்கு துன்பமில்லை
என்பதற்கு சான்றாய்.
காற்றுநிறை வளவுலகில்
வாழ்வோரைச் சொல்லலாம்.




உயிர்வதைக்கும் செயல்புரிவோர்
உறுதிப்பொருளாம் அறம்நீங்கி.
வாழ்க்கையின் மேன்மையாம்
குறிக்கோள் மறந்தோராவார்.

பொருட்செல்வம் இல்லார்க்கு
இவ்வுலக வாழ்க்கையும்.
உயிர்களிடம் அருளில்லார்க்கு
மேலுலக வாழ்க்கையுமில்லையாம்.

பொருளில்லாதார் பிற்பாடு
பொருளால் பொலியலாம்.
அருளில்லாரோ எக்காலத்தும்
சிறப்புறுதல் இல்லையாம்.

எளியோரைப் பகைத்து
துன்புறுத்தும் அருளில்லார்.
வலியோர்முன் தானஞ்சி
நடுங்கிடல் நேரிடும்!

கவிஞர் ஆன்றனி ஜமுனா,நாகர்கோவில்

# ஆத்தங்கரை ஓரத்துல

**ஆத்தங்கரை ஓரத்துல**
**அந்திச்சாயும் நேரத்துல**

ஆத்தங்கரை ஓரத்துல அந்தி சாயும்
வேளையிலே களத்து
மேட்டிலே காத்திருக்கேன்
கார் கூந்தல் அழகில் மயங்கிட
நீர்க்கொண்டு வருகையிலே குளிர்ந்து போனேன்
ஒத்தையடி பாதையிலே வயலோர வரப்பிலே
நீ செல்லுகையிலே
சொக்கி போனேன்
புள்ள
காட்டுவழி போகையிலே நீ
கண்டாங்கி சேலை கட்டி
நடக்கையில்
உன் அழகை நான் ரசிக்க
தினமும் மனம் தவியாய் தவிக்க
உன் மடிமீது தலை
சாய்கையில் என் கவலையும் தீர்ந்ததே



கவிஞர் ம.செ.அ.பாமிலா பேகம்,நாகர்கோவில்

# ஒரு போதும் நினைக்காதே

ஒரு பெண் முகநூலில் இருக்கிறாள் என்பதற்காக
உனக்கு முகமன் கூறுவாள் என்று நினைக்காதே.

ஒரு பெண்  வாட்சப்பில் இருக்கிறாள் என்பதற்காக
உன்னுடன் வழிந்து பேசுவாள் என நினைக்காதே.

ஒரு பெண் இன்ஸ்ட்ரா கிராமில் இருக்கிறாள் என்பதற்காக
உனக்கு இன்பம் தருவாள் என நினைக்காதே.

ஒரு பெண் ஸ்கைப்பில் இருக்கிறாள் என்பதற்காக
திறந்த வானமாய் இருப்பாள் என நினைக்காதே.

ஒரு பெண் டிக்டாக்கில் இருக்கிறாள் என்பதற்காக
உன்னுடன் ஆடிப்பாடுவாள் என நினைக்காதே

மொத்தத்தில் ஓர் பெண்
சோசியல் மீடியாக்களில் இருக்கிறாள் என்பதற்காக
சகஜமாக பேசுவாள் என்று
ஒருபோதும்  நினைக்காதே சோதரா.



நவீன யுகத்தில் அவள்  வாழ்ந்தாலும்
நாகரீகமாக இருப்பாள்,
வரையறைகள் அவளுக்கும் தெரியும் என்பதை
மறந்து விடாதே சோதரா.

கவிஞர் தாஹிர் சனூபா,தம்பலகாமம்(திருகோணமலை)

# சமாதானப் பூக்கள் வேண்டும்

எனது வலிகளை
விளக்கப்படுத்தினேன்
வாதிட்டேன்
வனாந்தரத்தின் அடரிருளில்
கண்களின் கண்ணீரைத் தொலைத்தேன்
வலிகளை உணர்ந்து கொள்ளும்
வழிகள் உன்னிடம்
புலப்படவில்லை
பூமியைத் துளைத்து
வெளிவந்து
மீண்டும் பூமிக்குள்
சென்று புதைந்து விடுகிற
மண்புழுவைப்போல்தான்
நீயும் உன் புரிதலின்மையும்
உன்னாலான ரணமும்.
தொலையும் நேசங்கள்
தொடர்ந்த வண்ணம்.
விதண்டாவாதங்கள்
வேண்டாவிட்டாலும்
மேடையேறி
தன்னாதிக்கக் கொடியேற்றும்
ஆதலால்
எனக்குத் தெளிவாகி விட்டது
எனக்குப் புலப்பட்டு விட்டது
நிறுத்தம் வருவதற்கும்
நிறுத்தப்படுதற்குமிடையிலான
வித்தியாசம்
உடைந்து நொறுங்குமுன்
முந்திக் கொண்டு விலகிக்கொள்கிறேன்
எனக்கு சமாதானப் பூக்களே
வேண்டும்!



கவிஞர் மரு ஜலீலா முஸம்மில்,ஏறாவூர்(இலங்கை)

# ரயில் பயணம்



கூஊ  என்ற ஓர் சத்தம் தொலைவில்
அதிர்வை வரவழைக்க
தொடரி ஊர்ந்து வரும் வேளை
மக்கள் சடுதியா ஆயத்தமாக.
இரைச்சலுடன்  தரித்து நிற்க.

மக்களுடன் நானும் ஏறிக்கொண்டு
ஆசனம் அமர்ந்து அடுத்த கணம்
விசில் சத்தம் கேட்டுக்கொண்டே
இரைச்சலுடன் பாய்ந்தது தொடரி.

அதில் பயணிப்போர் அவரவர் கருத்துக்களை சிதறவிட்டு
உடலின் சோர்வும் தெரியாத வண்ணம்
குளிர்காற்று  சாறல் என்னை சிலிர்த்திடச்செய்ய
பசுமையின் இரகசியத்தை  சுவாசிக்க
மலைமுகடுகளின் பனிமூட்டமும் கண்ணைக்கவரும்.

வரவேண்டிய இடம் வெகுதொலைவில் இல்லையே
ஓர் தவிப்பு மீண்டும் தொடர்வேன்
தொடரி உன்னையே!

கவிஞர் கனிதன் மா.சரவணன்,இலங்கை

# என் டைரியின் கடைசிப் பக்கம்

இதில் எழுதாமல்
விட்டுவிட்ட பெயர்கள்
சில இருக்கலாம்
அதைக் காலம் தான்
தன் நினைவில் வைத்திருக்கும்



இதுவரை நடந்துவற்றை
நான் எழுதி இருக்கிறேன்
இனிமேல் நடப்பவற்றை
நீ மட்டுமே எழுதப் போகிறாய்

அட்டை முதல் அட்டை வரை
எல்லாம் உண்மை என்று சொல்லவில்லை
ஆனால்
எல்லாம் பொய்யில்லை
என்பது மட்டும் உண்மை

வாழ்க்கை திறந்த புத்தகம் என்கிறார்கள்
ஆனாலும்
மறைப்பதற்கு ஏதோ ஒன்று
இருக்கத்தான் செய்கிறது

இந்த டைரியில் என்னைப்
பற்றியக் குறிப்பு சிறிதாகவும்,
உன்னைப் பற்றிய
செய்தி பெரிதாகவும் இருக்கலாம்
ஆனால்
உன்னைப் பற்றிய
எனது சிந்தனைகளே பெரிது

வாழ்க்கையை வாசிப்பவரைக்
காட்டிலும்
வாழ்க்கையை யோசிப்பவர்களே
அதிகம்

ஆகவே நான்
எழுதியிருப்பது
கடல்லல்ல
துளி தான்.

கவிஞர் இரா.மதிராஜ்,அலப்பட்சக் கவுண்டன் புதூர்

# தடம் பதித்திடு

நீண்டு பரந்திருக்கும் பிரபஞ்சம் தனிலே
மாண்டு போனவர் இலட்சக் கணக்கிலே

படர் கொடியாய்ப் பரந்து செல்லுதே
அடர் காட்டிலே அனைத்தும் பயிர்களே

நீயிங்கு இல்லை என்றான போதிலே
காயிங்கு கனியாகாது இருப்பதில்லையே

காலையில் கதிரவன் வர மறுப்பதில்லையே
கவின்மிகு மலர்கள் மலர்வதை வெறுப்பதில்லையே

பறவைகள் இன்னிசை பாடி ரசிக்காதிருப்பதில்லையே
பலவித உயிர்களும் புசிக்காமல் பசிப்பதில்லையே



சுற்றுச் சூழலில் மாற்றம் இல்லையே
சுற்றும் பூமியும் நின்று விடுவதில்லையே

மனிதா பிரபஞ்சத்தில் சிறுதுளி நீயாவாய்
இனிதாய் வாழ்வைச் சிறக்கச் செய்வாய்

நிலைத்திட பெயரும் நிதமும் சீரோடு
மலைத்திடும் வண்ணம் நித்தியமாய்ப் போரோடு

முக்காலமும் உன் மகிமை புவி ஓதும்
எக்காலமும் நின் புகழைகக் கவி பாடும்

கவிஞர் பஸ்லா பர்ஸான்,காத்தான்குடி(இலங்கை)

# ஏழையின் கண்ணீர்

சோதனைகள் பல தந்திடினும்
வேதனை சகித்திருந்தேன்
பக்குவபடுவேன் என்றே
பலகாலம் கடந்தும்
வேதனையே வாழ்க்கையாக
வெம்பித்தான் போனேன்
கற்றாழைப்புதரினுள்
கண்கட்டி விட்டாய்
குத்தும் முள்ளும்
சீழ்பிடிக்க வைத்து
மருந்தே நோயானது
சோதிப்பதை நீ நிறுத்தவில்லை
சாதிக்க எனக்கு வலுவில்லை
இறைவா நீ ஆணையிடு
இப்படிஒருபிறவி எனக்கு
இனிஇல்லையென.



கவிஞர் ஷீலாதேவிஅருணாசலம்,நாகர்கோவில்

# எழுதுகோல்



என்னை,
கவிதை எழுத வைத்த
எழுதுகோலே
நீதான்.

கவிஞர் பெ.சுரேகா,திண்டுக்கல்

# சொந்தத்தின் தேடல்

உறவிருந்த பிறவிக்கு
உயிர்கொடுக்க வந்தாயே.
மென்மையாய் நுழைந்து
மேன்மையும் தந்தாயே.
அழிந்த நினைவுகள்
ஆழ்கடலாய் உற்றெடுக்க.
வற்றிய வசந்தத்தில்
வற்றாத பேரின்பமே.
அரும்பிய மீசையில்
ஆனந்தம் கொண்டேனே.
கடந்த இடைவெளியில்
கடக்காத களவினமே.
வெய்யோன் குளிர்ந்திட
இல்பொழுது மலர்ந்திட.
இல்லாளும் வந்தாளே
இல்வாழ்வு தந்தாளே.



கவிஞர் ஏ.தேவராஜ்,சென்னை

# கொங்கு ஆரத்தி பாடல்

ஆராத்தி ஆராத்திங்க
அருமையான ஆராத்திங்க
கொங்கு நாட்டின் சிறப்பை சொல்லும்
அருமையான ஆராத்திங்க

ஆராத்தி ஆராத்திங்க
அருமையான ஆராத்திங்க
கொங்கு நாட்டின் சிறப்பை சொல்லும்
அருமையான ஆராத்திங்க

கோயம்புத்தூர் சீமையில
கொடவள்ளல் பரம்பரயில
பொறந்தவரு எங்க மச்சான்

எக்கசக்கம் படிச்சவரு
எங்க அக்காவுக்கு புடிச்சவரு
பாசக்காற எங்க மச்சான்

தேடுனாலும் கிடைக்கமாட்டாரு
கிடைச்சாலும் சிக்கமாட்டாரு
நல்ல மச்சான் எங்க மச்சான்

எங்கவீட்டு செல்ல தேவத
எப்படித்தான் கண்டுபிடிச்சாளோ
காதலத் தான் சொல்ல வைச்சாளோ

கோடிக்குச் சொந்தக்காரு
தாராள மனசுக்காரு
எண்ணாம் எடுங்க மச்சான்
தட்டத்தான் நிரப்புங்க மச்சான்

காங்கேயக் கவுண்டர் பரம்பரையில
வரம் வாங்கி பொறந்த புள்ள
வறும தெரியாம வளந்த புள்ள
செல்ல அக்கா எங்க அக்கா

தங்கத்த தாரமுங்க
பணப்பெட்டிய கொடுக்குறமுங்க
உங்க வம்சம் செழிக்க மச்சான்

கண்ணு கலங்காம
கண்ணத் தான் பாத்துகோங்க
அக்கா கைய புடுச்ச
அருமை மச்சான் ஆசை மச்சான்

பொன்னயும் பொருளையும்
அள்ளித் தாங்க மச்சான்
தட்டத் தான் நிரப்புங்க மச்சான்

ஆராத்தி ஆராத்திங்க
அருமையான ஆராத்திங்க
கொங்கு நாட்டின் சிறப்பை சொல்லும்
அருமையான ஆராத்திங்க

ஆராத்தி ஆராத்திங்க
அருமையான ஆராத்திங்க
கொங்கு நாட்டின் சிறப்பை சொல்லும்
அருமையான ஆராத்திங்க

கவிஞர் ஸ்ரீவி.முத்துவேல்,சென்னை

# தாய்

தேவதை செதுக்கிய
சிற்பம் உன் வடிவாய்
உருப்பெற்று நின்றதுவே
வான் நிலா குளித்த நீர்
உன் உடலின் வெண்மை ஆனதுவே
கருவறை தோட்டத்தில்
விதை என்னை
புதைத்து வைத்தாய்
உன் சத்தை உரிஞ்சி திண்ணும்
ஒட்டுண்ணி என்னை
உபசரித்து நீ வளர்த்தாய்
பத்து மாதம்
உயிர்வதை செய்த என்னை
பக்குவமாய் பெற்றெடுத்தாய்
சிறுசெடி வாடக்கூடாதென்று
பாலுணவு நீ தந்தாய்
மழை கண்ட
பாலைவனம் போல்
எனைக்கண்டு நீ மகிழ்ந்தாய்
வா மகனே என்று சொல்லி
மார்போடு அனைத்துக் கொண்டாய்



கவிஞர் ஹஸன் எம் பஜீத்,இலங்கை

# பள்ளியறை

அழகாய் நீ உறங்க
ஆசையோடு நான் வர
இஷ்டம் என்றால் உனக்கு
ஈர்ப்பு வரும் எனக்கு

உள்ளமெல்லாம் தவிக்க
ஊடுருவி தாவி அணைக்க
எண்ணம் தீர பள்ளியறை
ஏக்கமெல்லாம் தீரும்வரை

ஐம்புலன்களில் ஆற்றல் பொங்க
ஒருநாள் அதற்கு போதாது
ஓராயிரம் ஆசைகள் தீராது
ஔகத்துடன் இசைப்போம்
அஃதே தினமும் முடிப்போம்



கவிஞர் சு.வெற்றிவேல்,திருப்பூர்

# கொசுவிற்கொரு மிரட்டல்

சாவுவராதோ கொசுவே உனக்குமொரு சாவுவராதோ?
சுருக்சுருக்கென கடித்திடும் உனக்கிங்குசாவே வரவேவராதோ?
சுகமெமக்கு கெடும்படிநீ குறுதிகுடித்து கொடுத்தவெமக்கு
செய்ந்நன்றி மறந்துநோய் பரிசளிப்பதென்ன நியாயமோ!

டெங்கென்றவொரு நோயைநீயும் பரப்புவது நியாமோ?
அடவிந்த நோயைப் பரப்புவது பெண்கொசுவாமே!
பெண்ணென்றால் பேயுமிரங்கும் என்றதிருமொழி உளநாட்டில்
பெண்கொசுவேநீ பேயினுங்கொடுரமாய் யெமையிங்குத் தீண்டவதேனோ?

மலேரியா என்றொரு கொடூரத்தை கொடையாயளித்து
மண்ணில் வறுமையில் வாடுவோரை மேலும்வாட்டி
நீயாடும் ஆட்டம் கண்டோர் உன்னையொழிக்க
நாட்டம் கொள்வாரின்றி உனையிங்கியாரும் நேசிப்பாரோ!



பற்பல விலங்குகளைப் பறவைகளைப் பிடித்திட
பாவமேதும் பார்க்காது வலைவிரிக்கும் வல்லவரெம்மை
நடுநடுங்கச் செய்யும்கொசுவே உன்னைக்கண்டு நாங்களெம்
நலங்காக்க வலைக்குள் எமைசிறைசெயக் கண்டானந்தம்
நீகொள்ள உன்னையிங் கழிக்கவழியின்றி அலைகிறோம்நாங்கள்!

அகிலத்தில் வாழ்வோரில் ஆண்டொன்றிற் கொருமில்லியன்
ஆருயிர் மனிதர்களைக் கொன்றொழிக்கும் கொசுவேயுன்னைக்
கொல்ல ஏதேதோ கண்டுபிடித்தாலும் எதைக்கண்டும்
கவலைகொள்ளது ஆனந்தமாய்நீ ஆர்ப்பரிக்கிறாயே, அதுவெவ்வாறு?

கொசுவிரட்டிகள் சுருள்சுருளாய் இருந்துபுகைவிட அதைத்தாங்கிட
குண்டுமனிதர்முதல் ஒல்லிமனிதர்வரை படும்பாடு பெரும்பாடு;
ஆனால்நீயோ புகைகண்டஞ்சா வீரத்தோடு எரியும்நெருப்பை
அணைக்கவாவென கேட்பபோலதைச் சுற்றிவரும்மறந் தானென்னே!

செவ்வாயில்கால் வைத்தாலென்ன சந்திரமண்டலம் வென்றாலென்ன
சுகப்படவிட மாட்டேனும்மை யெனசூளுரைத்துத் தொல்லைதரும்
கொசுவேயுன்னை வாழ்த்திடவியலா தென்னாலது மட்டுமன்றுன்னை
கொன்றொழிக்க இயலாவிட்டாலும் சபித்திடமுடியு மதனாலடியேன்
கலம்பகமறம் பாடிசபிக்கிறேன் கொசுவேயுனக்குச் சாவுவருகவென!

கவிஞர் திருமலைக்குமரன் அருணாச்சலம்,கோவில்பட்டி

# ஒன்று சேர்வாய்

உயிரே
கம்பன் கவிதையின் சுவைதனை அறியவே
காதலின் கீர்த்தனம் பாடுதே
என் மனம் காதலின் சுவைதனை அறியவே
தேடுது உன் விழிதனை தினம் தினம்
நீ வீசும் பார்வை ஒரு காதல் ராகம்
நீ பேசும் வார்த்தை புது நாகரீகம்
நான் போகும் பாதை நீயாக வேண்டும்
நீங்காமல் வாழ்வில் நாமும் ஒன்றாக வேண்டும்.



கவிஞர் அகல்யன், சேலம்

# உலகத்தில் ஒரு நாள்

இந்த உலகம் ஒரு விசித்திரமான மாய லீலை.
உலகத்தை ஆளுக்கொரு நிலமாய் பிரித்து ஆளும்
அரக்கர்கள் நிறைந்த அண்டம் இது.

சூரியனும் சற்று தோய்ந்து போகும்
மானிடர்களின் மாடலை பார்த்து,
பெரும் வலிகள் நிறைந்த சுடுகாடு இது?
இப்பிரபஞ்சத்தில் பஞ்சத்துக்கும் பாவத்திற்கும் இடம் அதிகம்

உயிர் வாழ வாழ்வதற்கு வறுமை எனும் இடம் தாராளம்
தினம் தினம் தீராத போராட்டங்களும் போர்களும் ஓய்வதில்லை,
ஒரு தனி மனிதனின் அழுகுரல் வெளியே தெரிவதில்லை.
திகட்டாத சமுதாயம், முரண்பாடு பாகுபாடு, சாதி, மத, வேறுபாடு

வேகத்திற்கு ஆயுளைக் கூட்டும் மனிதர்கள்
மனிதனுக்கு ஆயுளைக் கூட்ட தவறுகிறார்கள்
தினம் தினம் ஒரு விபத்தில்.

வாழவைத்து பார்ப்பதை விட்டுவிட்டு
வாழ்பவனை அழித்துப் பார்க்கிறார்கள் மூடர்கள்.
பல கட்சிகள் மக்கள் அந்த சூழ்ச்சியில்
வீழ்ச்சிதான் நாள்தோறும்.

உரிமைக்காக திண்டாட்டம்
நீதிக்கு ஒரு பெரும் போராட்டம்
ஒன்றிலும் ஒலிக்காத
அழுகுரல் ஆயுளை முடித்துக் கொண்டே
தின நாள்களில் செய்தி குரல்.



நடிப்பவன் வாழ்கிறான்
எதிர்த்து உழைப்பவன் சாகிறான்
நாட்டை ஆள்பவன் கொள்ளை என்னும்
பாதையில் கோஷம் போடுகிறான்.

படித்தவன் பாதை
முள்ளுக்காடாகவே திகழ்கிறது
ஆனால்,
பாவம் செய்பவன் பாதை
சந்தனக்காடாகவே அமைகிறது.
இன்று
பணம் என்னும் பாதை
உலகத்தில் முதலாகவே திகழ்கிறது.

எமலோகத்திற்கு எடுத்துக்காட்டே
இந்த பூலோகம் தானோ

கவிஞர் ம.செல்லமுத்து,நூத்தப்பூர்

# ரகசிய நாட்குறிப்பு

சந்தோஷத் தருணங்கள்!
விருப்புகளின் குறிப்புகள்!
சுமையாய் அழுத்தும்
சோகங்களின் வடிகால்!
வெளிப்படும் கோபம்!
உணர்ச்சிகளின் பெட்டகம்!
உணர்வுகளோடு போராட்டம்!
நினைவலைகளின் நீட்சி!
ஒற்றறிய முடியாத
ரகசிய நாட்குறிப்பு
என் மனது!



கவிஞர் லதா சுப்ரமணியன், சென்னை-73

# தொடரும் ரசனை

வாசிப்பு என்னும்
வசந்தத்தை
குழந்தைகளுக்குள்
விதைப்போம்.



ஐயோ!
புத்தகமா
என்ற அச்சங்கள் இன்றி.
நூல்களுக்கும்
நூலகங்களுக்கும்
உயிரூட்டுவோம்.

வாசிப்பை மேம்படுத்தி
புத்துணர்ச்சி கொள்வோம்
புத்தகங்களோடு.
புத்தகம் பேசும் புதுமொழி
அவை அத்துனையும்
வருங்கால செல்வங்களின் எதிரொலி!

புத்தகமே காலத்தின் விதை
எனில்! வித்திடுவோம்
விதை நெல்லோடு சேர்ந்து
விஞ்ஞான புத்தகத்தையும்.

அதுவே வருங்காலத்தை
விருட்சம் பெற செய்யும்.
எனவே, இதைவிட
வேறு சந்தர்ப்பம் கிடைக்காது.

ஆகவே
வாசிப்பின் வாயிலில் ஒன்றிணைவோம்.
சிந்திக்கிறேன்
அதனால்தான் உயர்கிறேன் என்பதல்ல வாசிப்பு.

நான் வாசிக்கிறேன்
அதனால் தான் சிந்திக்கிறேன்
என்பதே வாசிப்பு.
ஆகையால்
வாசிப்பை மேம்படுத்தி
வாசகர்களை உருவாக்குவோம்.

வாசகத்தின் வாயில் சாவி
ஒரு புத்தகம்.
புத்தகம் சேமிப்பது பயனில்லை.
புத்தகத்தில் உள்ளவை
புத்தியில் சேமிக்கப்பட வேண்டும்.

கவிஞர் வெண்ணிலா பலராமன்,நயினார் பாளையம்

# தெரிவையின் திவலை

வானம் பார்த்த விழி இடத்தே
கன்னம் சிந்தும் திவலையும்
தீண்டாது வழிந்தோட



வசந்தமோ வாடைக் காற்றாய்
ஸ்பரிசம் தீண்ட
பாதுகை வரை நனைந்த
மேனியும் புல்லரித்தனவே.

புன்னகை புரியும் அதரங்களோ
வதனம் பட்டு தெறிக்கும்
திவலைத்துளியை ருசிப்பார்க்க

சிவந்த விழிகளோ
சிந்தனையேதுமின்றி அவனி மறக்க

செங்காந்தலாய் தென்றலோடு
செழித்து மாரி சுவைக்க.

மண்வாசனையும் மயக்கத்திலே
ஆழ்த்திடலானதோ அழகிய
மாலைப்பொழுதையும்.

கவிஞர் ச.கார்த்திகா,பழநி

# அவளும் மழையும்



இருட்டிய வானில்
ஒலிக்கும் இடிச்சத்தம்
காதை துளைக்க
வானை திரும்பிபார்த்தேன்
சடீரென வந்துமறைந்த மின்னல்

வறண்டுகிடந்த
வானையும்குத்தி துளைகள் செய்ததோ
முத்துமுத்தாய் தெறித்துவிழுந்த துளிகளோடு
பனிக்கட்டிகளும் பங்கெடுத்து விழும்போது.

முந்தானையின் ஒருமுனையை
தலைக்குமேலுயர்த்தி குடையாக கையிலேந்தி
ஓடும் - அக்காவின் எளிமையின் அதிசயத்தை
விக்கித்து நின்றுணர்ந்தேன்.

அவளுக்கும் மழைக்கும்
தூரம்கொஞ்சம் அதிகமென்று.

கவிஞர் கோவை ஆனந்தன்,கிணத்துக்கடவு

# மஞ்ச காட்டு மைனா



அக்காள் மகளோ
அத்தை மகளோ

மாமன் மனம் சொல்ல
ஒவ்வொரு வருடமும் காத்திருப்பு
பொங்கல் திருநாளுக்காக!

தை நாளன்று பொங்குவது
பானையில் பால் மட்டுமல்ல,
ஆசை மாமனின் அன்புக் காதலும்!

ஏங்க வைக்கிறாய் மெல்லிய
புன்னகை ஒன்றை சிந்திவிட்டு,
யானைப் பசிக்கு சோளப்பொறி போல!

மையிட்ட கண்ணே பரிபாஷையாக தோன்ற
அருகில் வந்தால் சிட்டாய்
பறந்து விடுகிறாய்!

பஞ்சு மிட்டாய் நிற தாவணியும்,
இரட்டை சடை கனகாம்பரமும்
பச்சைக்கொடி காட்டுவது போல்
பாசாங்கு செய்யுதடி!

கணுக்கால் தெரிய மான்போல்
துள்ளி ஓடுகிறாய்.
கனவெல்லாம்
உன் சிணுங்கல் கொலுசுடனே கழியுதடி!

போதுமடி உன் கண்ணாமூச்சி
ஆட்டம்.
இன்றைய நாள் என்னுடையது!

வெண்ணிற பாலாடை
மஞ்சள் நீராடும்
நாளும் வந்தது!

மஞ்ச தண்ணீர் ஊற்றி
உன் மாமன்,
காதலை சொல்லிடத்தான்
போகிறேன்.
என் மஞ்ச காட்டு மைனவே!

**காரைக் கவிஞர் எழிலி**

# கற்க கசடற

கற்க கசடற
கற்பவை கனிந்திடும்
கரைகாணாக் கல்வியோ
கரிசனையாய் உதவிடும்

இளமையிற் கற்றல் சிலையென நிலைத்திடும்
பல்துறையும் சிறக்க பாரினில் உதவிடும்

காலமும் நேரமும் கடுகதியில் சென்றிடும்
கற்றவை மட்டும் கருத்தினில் ஊன்றிடும்

கற்றவனுக்குச் செல்லும் இடமெங்கும் சிறப்பு
மற்றவனுக்குத் தன் நாட்டில் மட்டுமே மதிப்பு



கற்றலின்படி ஒழுகிடல் அழகு
குற்றங்கள் மறந்து வாழ்ந்திடப் பழகு

கற்பித்த ஆசானை கணமேனும் மறவாதே
சிந்தையில் தலைக்கணம் ஒருபோதும் கொள்ளாதே

உள்ளத்தில் நல்ல எண்ணங்கள் கொண்டிட
உறுதுணை யன்றோ உயரிய கல்வி

கற்போம் கற்போம் கசடறக் கற்போம்
கல்வியில் சிறந்து அவனியில் துளிர்ப்போம்

கவிஞர் மாஹிரா ஹமீட் அஸ்ஹர்,கம்பளை

# அழியாத காதல்

எனை கட்டுப்படுத்தலாம்.
என் கற்பனைகளை?
என் கனவுகளை?

எனை இயக்கலாம்.
என் உணர்வுகளை?
என் ஆசைகளை?



எனை வதைக்கலாம்.
என் மனதினை?
என் நினைவினை?

எனை பிரிக்கலாம்.
என் ஆளுமையை?
என் உரிமைகளை?

வாழவே செய்வேன்.
அவன் சரீரத்தோடு அல்ல.

அவன் ஆன்மாவோடு.

உள்ளத்தின் தீண்டலுக்கும்
உணர்வுகளின் மீறலுக்கும்
பிறந்த காதலுக்கு அழிவென்பதேது?

கவிஞர் மதுகை,திருச்சி

# தமிழ் மொழிப் பாதுகாப்பில் நமது பங்கு

தொன்மை தொட்டுத் தொடரும் தழிழ்மொழி
பண்பைச் சொல்லும் பாரின் வழியே
உயிரோடு ஒன்றி உணர்வோடு உறவாடும்
பயிராகக் காத்து பாரிலே விதைப்போம்

கலாச்சாரம் பண்பாட்டை கற்றலில் படைத்து
பலதரப்பட்ட கலைகளையும் பாலருக்கு இனிப்பாக்குவோம்
அந்நிய மொழியை அண்டி வாழாது
கன்னி மொழியினை கண்ணின் ஒளியாக்குவோம்

பிறக்கும் சமூதாயத்திற்கு பிரியத்தோடு புகட்டிடுவோம்
அகரத்தோடு அமுதாய் அன்னைமொழி ஊட்டிடுவோம்
எண்ணற்ற மொழி எங்கு பேசினாலும்
எண்ணத்தில் திண்ணமானது எங்கள் உயித்தமிழே

மறத்திலும் உரத்திலும் மாண்போடு வளர்த்து
தரத்தின் உச்சத்தி தளராது நிறுத்துவோம்
தாகம் தீர்க்கும் தண்ணீராய் தமிழ்மொழி
தேகத்தில் ஊறும்உதிரமாய்
தமிழினத்தாகமாய் இருத்துவோம்




பண்டைத் தொட்டு படரும் கொடியினை
தொப்பிள் கொடியோடு நாவிலே தொடுப்போம்
வானவீதி ஊர்கோலத்தில் வண்ணத் தமிழை
கானம் பாடும் கவிக்குயில்களின் கீதமாக்குவோம்

விதைபோட்டு முளைப்பதை விசித்திரமாய் ஆக்கி
கதைபேசிச் சுவைக்கும் கரும்பின் தேனாக்குவோம்
பூக்களைத் தேடும் புதிரான வண்டினமாய்
பூத்திடும் மாணவர்களின் பூந்தமிழாய் மலரவைப்போம்

தென்றலாய் வீசும் தெவிட்டாத தேன்மொழியை
அன்போடு சேர்த்து ஆதவனாய் மிளிரவைப்போம்
கலாச்சாரம் கொண்ட காற்கால காவியமொழியை
பலாச்சுளையாய் பாரிலே பலருக்கும் பகிர்ந்தளிப்போம்

எம்மொழியை எதிர்ப்பவர்கள் வன்மத்தை ஒடுக்குவோம்
என்உயிர்த் தமிழென எடுத்துரைப்போம் அனைவருக்கும்
எத்தர்களின் ஏளனத்தை ஏறிமிதித்துத் தகர்ப்போம்
சித்தராயிருந்து செம்மொழியின் சிறப்பினை சீராக்குவோம்

கவிஞர் கிருஷ் அபி,இலங்கை

# விலங்குகள்!



விழா எனும் பெயரில் வீச்சறிவாளுக்கு,
வீண் பலியாகும் வீரியமுள்ள விலங்குகள்,

விசுவாசமுள்ள விலங்கினமும்,
விசுவாசமற்ற மனிதர்களுக்காக,
விழிநீரை விரயமாக்கும் வீட்டு விலங்குகள்,

விளக்கேற்றி வழிபடும் விழா நாயகர்களுக்கும்,
விதவித விலங்குகள் வாகனங்களாக.!

விலையில்லா விலங்கு அளித்து,
விதிவிலக்கைமீறி விகிதம் வாங்கிய வில்லங்க மனிதர்கள்,

விபரம் தெரிந்த விளக்கம் தெரிந்த
விளங்காத மனிதனும் ஒருவகை விலங்கே!

விலங்கின் பெயரில் வியாதிகளும் ,
விளங்கா மனிதனும் பெயரோடு வித்திட்டான்,

விரும்பி வளர்த்த விலங்கதுவும் ,
விருந்தினர் வந்தால்
விருப்பமில்லா விருந்தாகுமே

விதிமுறைகள் விதித்த நாளில் ,
விதிவிலக்கானது வீதிவிலங்குகள்!

கவிஞர் நீலா சுபாஷ்,ஆக்கூர்

# தையல் சிட்டே!

கைமாறு செய்கிறேன்
என் தலைமுறைகளும்
கைப்பேசி தொடாமல்.
ஓசோனில் ஓட்டையாம்
தைத்து வருவாயா
தையல் சிட்டே!



கவிஞர் லா.பெனிஸ்,நெல்லை திசையன்விளை

# தலையணைத் தோழன்

நாணப்பட்டு முகம் புதைப்பதும் உன்னிலே
சோகப்பட்டு கண்ணீர் வடிப்பதும் உன்னிலே

இரவானால் நீ வேண்டும்
உன்னில் தலை சாய்த்து தூங்க வேண்டும்

கோபங் கொண்டால் எட்டி உதைப்பேன்
மீண்டும் கட்டியணைத்து முத்தங் கொடுப்பேன்

நீ ஆறுதலாய்ப் பேசியதேயில்லை
ஆனால் உன்னில் அரவணைப்பிற்கு பஞ்சமில்லை

என்றும் தனிமையை உணர்த்தாமல்
மௌனமாய் பேச்சுக்களை தொடர்ந்திடுவாய்



எதைப் பேசினாலும் எதிர்த்துப் பேசமாட்டாய்
ஏமாற்றம் தரவும் மாட்டாய்

உரிமை மிக்க உறவே!
உயிர் உள்ளவரை என் தேடல் உன்னில் மட்டுமே

கவிஞர் சன்ஹா நிஜாம்,புத்தளம்

# திருநாவுக்கரசு

## (பாகம் நான்கு)

அரசர் வேதாரண்யத்தில் இருக்க ஈசன் கனவில் இட்ட கட்டளை
"வரவேண்டும் திருவாய்மூர் யாம் முன்னே செல்ல பின்னே வாரும்"
மரங்கள் அடர்ந்த சோலைகள் நிறைந்த திருவாய்மூர் சென்றார்
வரம் தந்த சிவன் கனவில் காட்டிய கோலத்தில் எழுந்தருளினார்

பிரம்மனும் திருமாலும் காண முடியாத திருக்காட்சியை காட்டினார்
பரவசமான அரசர் அடி முதல் முடி வரை சிவனை தரிசித்தார்
முரசுகள் முழங்க, ஆலய மணிகள் ஒலிக்க ஊர் மக்கள் பூரித்தனர்
பரமரைப் போற்றி "பாடவடியார்" என்னும் திருப்பதிகம் பாடினார்

பல திருத்தலங்களை வணங்கி பதிக மாலைகள் பாடினார்
தலங்கள் தோறும் உழவாரப் பணிகள் செய்து தொண்டாற்றினார்
சிலந்திப் பூச்சியை அரசாள வரம் கொடுத்த திருவெறும்பூர் வந்தார்
மலராத சோலைகளும் அரசர் வருகையால் மலர்ந்து மணம் வீசின




வழிநெடுக தாகமும் பசியும் உண்டாக சலியாமல் நடந்து சென்றார்
கழிகொண்டு நடக்க நடக்க பாதங்கள் தேய்ந்து உடல் இளைத்தார்
பழிச்சொல் வராமல் சிவன் சோலைகள், குளங்கள் உண்டாக்கினார்
வழிப்போக்கனாக கட்டுச் சோறுடன் பிராமணராக வந்தார் ஈசன்

நீண்ட வழி நடந்து கால்கள் சோர்ந்து களைத்து இளைத்து இருக்கிறீர்
ஊண் கொண்டு வந்துள்ளேன் கட்டுச்சோறு உண்டு இளைப்பாருங்கள்
தாண்டவமாடும் சிவனே இந்த பிராமணர் உணர்ந்தார் நாவுக்கரசு
மீண்டும் இறை அருள் போற்றி பதிகம் பாடி திருப்பஞ்சிலி வந்தார்

சிவனைத் தொழுது தமிழ்ப் பதிகம் பாடி திருவண்ணாமலை வந்தார்
அவனன்றி அணுவும் அசையாது என்று பாடி காஞ்சிபுரம் வந்தார்
புவனம் போற்றும் திருகாம்பரரை தரிசித்து திருப்பணிகள் செய்தார்
"அவன் என் எண்ணத்தான்" இறுதிசொல் வைத்து பதிகங்கள் பாடினார்

வயல்கள் சூழ்ந்து பலாப்பழங்கள் விளையும் திருவான்மியூர் வந்தார்.
சுயம்புவான பிறப்பு அறுக்கும் மருதீஸ்வரரை அன்புடன் வணங்கினார்
வியந்து போற்றும் திருவாலங்காட்டை வணங்கி திருவருள் பெற்றார்
வயது முதிர்ந்து நடை தளர்ந்த நிலையில் கயிலை திருகாளத்தி வந்தார்

தெலுங்கு தேசம் கடந்து மாளவ தேசம் நடந்து மத்திய தேசம் வந்தார்
மலங்க புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய மனம் வருந்தினார்
கலந்த அன்பினால் கசிந்து உருகி கால்கள் தடுமாற நடந்தார்
நலன்தான் இலாத சிறியேன் கயிலை காட்சி காண விழைந்தார்

கால்கள் தேய்ந்து நடக்க முடியாமல் மார்பினால் நகர்ந்தார்
"பாலையில் உடம்பின் தசைஎல்லாம் குருதி சிந்த எங்கு போகிறீர்?
மேலும் சுட்டெரிக்கும் நிலத்தில் என்ன வேலை?" அசரீர் கேட்டது
"நால்வேத நாயகன் ஆனந்தத் திருகோலம் காணாமல் செல்லேன்"

திருநாவுக்கரசர் சூளுரை கேட்டு மனமிரங்கி ஈசன் தரிசனம் தந்தார்
திருமேனி திரும்பப் பெற்று திருக்கோலம் கண்டு கூத்தாடினார்
திருப்பதிகம்,"மாதர் பிறைக் கண்ணியானை மலையான் மகளோடு"
பெருமகிழ்ச்சியால் வனத்தின் ஐந்து வகை ஒலிகள் நிறைய முற்றும் .

கவிஞர் ந.திருக்காமு

# அப்பா

உதிரத்தை உயிராய் தந்தவர்
வாழ்க்கைப் பாடத்தை உணர்வாய் தந்தவர்
பருக்கை சோற்றில் பக்குவம் தந்தவர்
கண்டிப்புடன் நடக்கையில் ஆசானாய் இருப்பவர்
பாசமாய் பேசுகையில் அன்னையாய் திகழ்பவர்
சிலநேரம் நிகழ்கால ஹிட்லராகவும்
பலநேரம் உயிர்ப்புடன் இருக்கும்
சார்லி சாப்ளின் ஆகவும் மகிழ்விக்க முனைபவர்
மொத்தத்தில் விலை மதிப்பில்லா வைரமாயவர்.



கவிஞர் நிலமதி ராஜி,கல்முனை(இலங்கை)

# உலர்ந்த ஈரக்காகிதம்

இரவு விழுங்கிய இருளை
விழுங்கிப் பகல்பொழுதின்
வினை கூட்டிய இரவு

இருள்கூட்டி வந்து
இமைப் பொழுதில்
சிரித்தது
பகல் பொழுதின்
பிளாட்டின ஒளி
மறைத்துவிட்டு

பிடித்த பாடலின்
வரிகளும் கரைந்தோடியது
கனவுக்குள் நிஜமெதுவோ
கண்டுகொள் என்று.

எனை உறிஞ்சிய
வெறுமைப் பொழுது
காய்ந்த ஈரக் காகிதமாய்
சடசடத்தது

விட்டத்து பல்லி
ஏதோ சொல்லியது
பதில் கூறிவிடும் ஆவலில்
துள்ளும் குரலை
விரல் நீட்டி எச்சரித்தது
பருவம் மறைந்த பக்குவம்



கவிஞர் ஜெயப்பிரபா,சென்னை 81

# அம்மா

நீராடிய விழிகளோடு
நான் போரடிய
நாட்களில் எல்லாம்
நீ சீராட்டிய
நினைவுகள் தான்
என்னை தாலாட்டி
துணை நிற்கும்



கவிஞர் விக்னேஷ் கலியமூர்த்தி,தஞ்சை

# தை மகளே வருக

தை பிறந்தால்
வழி பிறக்கும்
முன்னோர்களின் வாக்கு
வருடந்தோறும் நீ பிறக்கிறாய்
வழி பிறந்தபாடில்லை
வலிகளுக்கும் பஞ்சமில்லை
தமிழர்களின் வாழ்க்கையில்
வரும் தைத் திருநாள்
கானல் நீர் போல் இல்லாமல்
காலமெல்லாம் வசந்தம் வீசட்டும்
தமிழர்களின் வாழ்க்கையில்
தை மகளே வருக
தைத் திருநாளில் பொழிக




கவிஞர் தி.சரவணன்,சங்கரன்கோவில்

# எரியும் குடிசை!

தீப்பிடித்து
எரிந்துகொண்டிருக்கும்
என் குடிசையை
அணைக்க இதுவரைக்கும்
யாரும் வரவுமில்லை

நாங்கள் யாரையும்
எதிர்பார்த்ததுமில்லை
நாங்களாகவே
எரியும் தீயை
அணைத்து
உடலால் அரவணைத்து
கொண்டோம்
சாம்பல் நிறம் பூசிய
கரிகட்டையாகி கிடக்கிறது
உடல்களும் குடிசையும்.



கவிஞர் ச.சக்தி,அழகு பெருமாள் குப்பம்,பண்ருட்டி

# தலைப்புகளின் கோலம்

வலைவீசிய மேகத்துள்
முகம் மறைத்த மயக்கத்தில்
கதிரவன்
காதலால் கட்டுண்டு
கனிந்த குளுமையில்
கதிர்மடக்கி
கண்திறக்கா கதிரவா
தாவித்திரியுதே காற்றும்
சில்மிஷ சிணுங்கலில்



மார்கழி திங்களில்
மழைமேக கூடாரம்
பனிவிலக்கி பதவியேற்பு
காலை சங்கீதத்தில்
ஆலயமணியின் அழகோசையும்

விடியலை வரவேற்க
ஓதிடும் பட்சிகள்
சொல்லித்தந்ததாரோ
சுகமான விடியலுக்கு
சுகந்தமான வரவேற்பு நல்கிட

தினமும் காண்கிறேன்
கிழக்கின் வெளுப்பின்
வெட்கச் சிகப்பை
கீதமிசைக்கும் தென்றல் மகள்
தொட்டு தாலாட்டி
தூரிகை பொழியுது
வரைகின்ற ஓவியம்
மனதை மீட்டி மயக்கத்தின்
பிடிக்குள்

இலை நுனிகள் இதழ்மடித்து
வெட்கத்துளி கசிவில்
கதிரொளி முத்தம் கேட்டு
காற்றை தூதென அனுப்பியும்
வெட்கம் துடைத்திட
விரைந்தெழும்புதே
கவிதை கதிரொளி கலகலத்து
இதோ காலையின் வாசலில்
கதிரவன் கோலம்

கவிஞர் கனகசுந்தரி பாஸ்கரன்,திருப்பூண்டி

# ஆழ்மன வசிப்பு



உன்
உள்ளங்கை
பற்றும் போதே
உயர்ந்தோம்
உயரத்தில்
பறந்தோம் !

நேற்று கண்ட முழுநிலவு
தேசத்தில் தோய்ந்து
வாசத்தில் சிவந்தது !

முழுநிலவோடு
முழுப்பாதை
கடந்தோம் !

அலைகளோடு
பேசினோம்
ஆழ்மனதில்
வசித்தோம் !

கால்தடத் தோன்றலை
கடலலையில் நனைத்தோம் !

ஒரு கை
உனது
மறு கை
எனது
இரு கை
தொழுதோம்
இறைவன்
சிரித்தான் !

நிலவே
நாம்
ஆனோம்
நினைவில்
பூ ஆனோம்
கனவில்லை
நிஜமானோம் !

கவிஞர் ஆர்.மோகன்ராஜ், சென்னை

# அகத்தியலிங்கனார்



நாகர்கோ விலண்மையில் காண்கேசவன் புதூரினிலே
ஆயிரத்துத் தொளாயிரத்து இருபத்து ஒன்பதினில்
ஆகச்டின் பத்தொன்பது தேதியினில் தோன்றிட்டார்!
அகத்தியலிங் கமாண்பினரே!அண்ணாமலை பல்கலையில்
தமிழிலக்கிய முதுகலையை உற்றிட்டார்! கேரளத்துப்
பல்கலையில் அமெரிக்கசார் இந்தியானா பல்கலையில்
மொழியியலாம் துறைதனிலே சீர்முனைவர் பட்டத்தைப்
பெற்றாரே! நாகர்கோ விலமைந்த ஹிந்துப்பேர்
கல்லூரி தன்னிலவர் தமிழ்துறையில் விரிவுரையை
ஆற்றுகின்ற பணியேற்றார்! அண்ணாமலை பல்கலையில்
மொழியியலின் துறைதனிலே இயக்குநராய் மிளிர்ந்தாரே!
சிகாகோவின் பல்கலையில் வருகைதரு பேராசிரி
யராகவிவர் தொண்டேற்றார்! தமிழ்பல்கலை கழகத்தின்
துணைவேந்தாய் செவ்வியராய்த் துலங்கினாரே! உலகத்தமிழ்
ஆராய்ச்சி நிறுவனத்தே வருகைதரு நற்பேரா
சிரியரென ஒளிர்ந்தாரே! மைசூரமை நற்செம்மொழி
நிறுவனத்தே செம்மாந்த நல்முதுநிலை ஆய்வறிஞர்
மாட்சிமையை ஏற்றாரே! நம்மிந்திய மொழியியலின்
கழகத்தைக் கண்டோரில் ஒருவராகப் பங்கேற்று
செம்மையைச் சேர்த்தாரே! தமிழினிலே இருபத்து
நூல்களினை யாத்தளித்தார்! ஆங்கிலத்தில் படைத்தவையோ
ஒன்பதாகும்? ஆய்ந்திட்ட கட்டுரைகள் இருநூற்றின்
மேலாகும்! செம்மாந்த வாழ்வினராம் மாணகத்திய
லிங்கனார்தாம் சாலையில் காண்விபத்தால் ஏழ்பத்து
வயதினிலே இரண்டாயிரத் தெட்டதனில் ஆகச்டின்
நான்கினிலே மூச்சடங்கிப் போனாரே! அன்னவரின்
மொழித்தொண்டு தமிழ்நாட்டில் தமிழுணர்வு உள்ளவர்கள்
வாழும்வரை நித்தியமாய் நிலைத்திடுமே!மொழிவளர
பம்பரமாய்ச் சுழன்றவரை நீள்நினைவில் ஏந்தியேநாம்
போற்றிடுவோம்! அவர்போலே வாழ்வமைந்து போற்றுவமே!

கவிஞர் கணக்காயன்(இ சே இராமன்)

# பணம்

தேவையான போது
கிடைக்கும் பணத்திற்கு
விலைமதிக்க முடியாது

தேவையில்லாத போது
கிடைக்கும் பணத்திற்கு
மதிப்பே கிடையாது

சேமித்து வைத்து
பெருமை கொள்வதை விட
கஷ்டப்பட்டு சம்பாதித்து
கட்டுப்பாட்டுடன்
செலவழிக்கும் போது
பணத்தின் அருமை புரியும்



செல்வந்தன் கையில் இருக்கும்
இலட்சங்களைவிட
ஏழையின் கையில் கிடைக்கும்
ஆயிரம் ரூபாவுக்கு
மதிப்பு அதிகம்தான்

பணக்காரன் அதனை
ஒரு நொடியில் செலவழிப்பான்

ஆனால் ஏழையோ
அதனை செலவழிக்க
ஆயிரம் தடவை யோசிப்பான்

உன்னிடமுள்ள பணத்தில்
தங்கியிருக்கின்றன
உனக்கான மதிப்பும்
உலகில் உனக்கான வரவேற்பும்

கவிஞர் ஷெண்பகச் சோலையாள், ஆய்ஷ்

# மரத்திடம் ஒரு கேள்வி!

## அசோகமரம்



வேப்பிலை உடை தரித்து
வேண்டி நிற்கும் பெண்கள்போல்
இலையால் உன் உடல் போர்த்தி
என்ன வேண்டி நிற்கின்றாய்?

## ஆலமரம்



விஞ்ஞான உலகில்
விதவிதமாய்த் தைலங்கள்!
எத்தனை வந்தாலும்
பாவையர் கூந்தலுக்கு
பயனெதுவும் கிடைக்கவில்லை!
ஆறடிக் கூந்தல்
அரையடி ஆனதுவே!
ஆண்டுக்கு ஆண்டு
அடர்ந்த நின் கிளையெங்கும்
விரிந்த சடைமுடியாய்
விழுதுகளை நீவளர்க்கும்
விந்தை என்னென்பேன்!

கவிஞர் ஈ.சீ.சேஷாத்ரி

# அச்சமில்லை மனமே

நீண்ட நேரமாக ஆசையை மறந்து
வேர்விட துணிந்த புத்தனுக்கு
நிமிர்ந்து
விழ மறுக்கும் மரத்தைப்பார்க்க நேரமில்லை
இலையின் எடை மொத்த மரத்தையும்
ஏற்று தாங்கிக்கொண்டு விழுகிறது
அவனருகில்.

நிலாவை வர்ணிப்பவர்கள் அருகில்
நட்சத்திரத்தை கண்டுகொள்வதில்லை
அவர்கள்
அருகே குழந்தையின் கையில் உருள்கிறது
மொத்த அண்டத்தின் அட்டை வடிவம்.

இன்றுவரை தேங்கிக்கிடந்த
வாழ்க்கையெனும்
கல் விருந்த நீர்த்தேக்கத்தில்
பிரிந்த நீர்க்குமிழிகளில் பல நூறு முகங்கள் தேக்கம்
மேலும் எடையேறி வழிந்தோடுகிறது
வாழ்வின் பாதையில்.

தரைக்காற்றை இழுத்தேற்றி
மீண்டும் உன்முகத்தில் பீறிற்று அடித்து
குளிருற்றும் விசிறியின்
மேலெங்கும் இயற்கையின் மேல்
கோவம் கொண்ட தென்றலின்
கோவக்குளிர் பரவல்கள்.



இத்தனையும் கண்டதொரு மனதிற்கு
சற்று கனமேறி அச்சமின்றி நகரச்செய்கிறது
காதகாதமாய் வாழ்வுனூடே!

கவிஞர் சே கார்கவி கார்த்திக்

# சாதிக்க தூண்டும் சபதங்கள்

ஆண்டின் இறுதி வாழ்வின் ஆரம்பம்
ஆட்டம் கொள்ளும் விதியின் தொடக்கம்
ஆரம்பித்து வைக்கிறது முற்றுப் புள்ளிகள்
ஆட்டிப் படைக்கிறது வன்மத்தின் சுவடுகள்

வருவதை எதிர்த்து வாழ்வை ஒளியூட்டவே
வருகின்றதை பொருமையோடு ஏற்றுக் கொண்டே
வராததை எண்ணி கவலை துறந்தே
வருத்தியதை விட்டு நேர்மையாக சிந்தித்தே



வெறிகொண்ட வேட்டை சிங்கமாய் ஓடியே
வெட்டுக் காயங்களுக்கு பட்டை இட்டே
வெற்றித் திலகம் நெற்றியில் இட்டே
வென்று முடிக்க புலியாக பாய்ந்தே

சுற்றி இருக்கும் கெட்டதை எரித்தே
சுற்றிச் சுழலும் பூமியாய் சுற்றியே
சுடர் விட்டு வாழ்வு ஒளிமயமாகவே
சுடுகின்ற நெருப்பிலும் கொதித்து எழுந்தே

சதியின் திட்டங்களை முறியடித்து முன்னேறவே
சலைத்திடாது தொடர்ந்து எழுந்து பயணித்தே
சதுரங்க விளையாட்டாய் வாழ்வில் பந்தாடினாலுமே
சாதுர்யமாக சிந்தித்து செயல்பட்டே

முடியாததையும் முடித்துக் காட்டிடவே
முயற்சியோடு பயிற்சிகள் செய்தே
முற்றுப்புள்ளியை துவக்கப்புள்ளியாய் ஆக்கியே
முடிவையும் முதலாய் வண்ணமாய் ஆக்கிடலாமே

கவிஞர் ஜஸூரா ஜலீல்,மலேசியா

# ஹைக்கூ கவிதை

மனம் நிறைய சந்தோசம்,
பொங்கலுக்கு வீடுவந்து சேர்ந்தது,
ஆவாரம் பூ.



கவிஞர் அ.செல்வராஜ்,உடுமலைப்பேட்டை

# ஒற்றை பார்வை போதும்

உன் ஒற்றை பார்வை போதும்
உறங்கி கொண்டிருக்கும் என் பெண்மை
உயிர் கொண்டு விழித்துக் கொள்ளும்
சட்டென திரும்பிக்கொள்கிறாய் தகிக்கிறதே தத்தை நெஞ்சம்

மனதில் இருக்கும் காதலை மறைப்பதேனோ?
மங்கை என்னை தவிப்பில் ஆழ்த்துவதுமேனோ?
சொல்ல நினைத்தும் சொல்லாமல் போகிறாய்
மவுனத்தை களைத்துவிடு மனதை காட்டிவிடு

உன் ஒற்றை வார்த்தையை கேட்க
தேடி வரும் ஓராயிரம் வார்த்தைகளை வெறுக்கிறேன்
இயலாமையால் எரிந்து விழுகிறேன் பார்ப்பவரிடம்
பார்வையை பரிசாக தருவாயா சொல்

பாராமல் போவதின் மர்மம்தான் என்னவோ?
விழியில் விழுந்தால் எழவே முடியாதென பயமோ?
விழுந்தவுடன் இதயம் நுழைந்து கண்ணில் தெரிவாய்
காதலின் மாண்பே அது தான் அன்றோ?



ஒவ்வொரு நாளும் காத்திருக்கிறேன் என்பதை மறவாதே
மரணிக்கும் முன் சொல்லிவிடு நீயும் காதலித்தாயென
காதலை சொன்னால் என்னை கொன்றிடுவார்களோ?
உன்னை நீ கொன்றுகொண்டிருக்கிறாயடா புரிகிறதா?

மனம் தானே உன்னை விரும்பியது
மதம் நடுவில் எங்கிருந்து வந்தது
சங்கமம் ஆனது இதயம் அல்லவா?
சாதி இடையில் எப்படி நுழைந்தது
பிடிக்கவில்லை என்று கூட சொல்லிவிடு

பிடித்தும் சொல்லாமல் உயிருடன் புதைக்கிறாயே காதலை
மரணித்தால் தான் மனிதர்களை புதைப்பார்கள்
உயிரோடே இரு மனங்களை புதைத்திட்டாய்
அழுது புலம்புகிறேன் காதலித்ததிற்காக அல்ல.
என்னையும் நேசித்து தன்னை மறைத்துக் கொண்டவனுக்காக.

கவிஞர் ரோஜாராணி,தேனி

# பயணங்கள் முடிவதில்லை

வாழ்க்கை பயணம்
முடிவதில்லையே.

மறைந்த பின்னும்
மனதில் மாமனிதனாய்

வாழும்போது புனிதன்
வந்துதிக்கிறானே.



கவிஞர் இரஜகை நிலவன், மும்பை

அகர முதல இலக்கிய பேரவை

Aagaramuthalaa www.அகரமுதல.com aagaramuthala@gmail.com

# கிராமத்து கீதம்

மயக்கும் மான்விழியே
மாமனின் காதலியே
பார்க்கும் பார்வையில்
ஏக்கம் கூடுதே
நேசம் தந்து
நெஞ்சில் நிற்க்கிறாய்
கண் அசைவில்
காதலிசம் செய்கிறாய்.

களத்து மேட்டில்
கட்டி யணைத்தவளே
கட்டுகடங்காத காளை
மனதை கட்டிப்போட்டவளே
சலசலப்பு வேணாமடி
கண்ண கதகதப்ப தாடி
முத்தம் நூறுதாடி
மொத்தவுசுரும் உனக்குதாண்டி.



இடைவெளி வேணாண்டி
இடுப்ப கொஞ்சந்தாடி
மஞ்சதாலி வெச்சிருக்கேன்
மாமன் பேச்சை கேளடி
மார்கழி முடிஞ்சதும்
கல்யாணம் தாண்டி
மனசுல எப்பவுமே
நீயே தாண்டி!

கவிஞர் ச.இராஜ்குமார்,திருப்பத்தூர் மாவட்டம்

# வாழ்வியல் சிந்தனை

1. உழவனின் உழைப்பில் உயிர்கள் உலாவுகிறது உலகில்.

2. என் பாட்டி வீட்டு அஞ்சறைப் பெட்டியில் ஆரோக்கியம் ஒளிந்திருந்தது.

3. உயிரையும் உடலையும் உருவாக்கும் கருவறைக்கு இறையின் அருள்.

4. வீட்டைப் பாதுகாக்கும் பூட்டிற்கு சாவியில் பலம்.




கவிஞர் சா.நாகூர் பிச்சை,திண்டுக்கல

# இரா. இளங்குமரன்

## (கட்டுரை)

### பிறப்பு



செந்தமிழ் அந்தணர் என்று அழைக்கப்படும் புலவர் இரா. இளங்குமரனார் திருநெல்வேலி மாவட்டம் வாழவந்தாள்புரம் என்னும் சிற்றூரில் 1927 சனவரி 30 அன்று பிறந்தார். தந்தை படிக்கராமர், தாய் வாழவந்தம்மையார் ஆவார். 1946 ஏப்ரல் 8-இல் முதல் ஆசிரியராகப் பணியாற்றத் தொடங்கினார். பின்னர்த் தனியே தமிழ் கற்று சென்னைப் பல்கலைக்கழகத்தின் வழியாக 1951-ஆம் ஆண்டில் புலவர் தேர்வில் முதல் வகுப்பில் வெற்றி பெற்றார். பள்ளிப்பருவத்தில் சொற்பொழிவாற்றும் திறனும் பாடலியற்றும் திறனும் பெற்றிருந்த இவர் இயற்றிய குண்டலகேசி என்னும் காவியம் 1958-ஆம் ஆண்டு மதுரை அங்கயற்கண்ணி ஆலயத்தில் அரங்கேற்றப்பட்டது.

### பணிகள் :

இரா. இளங்குமரன் தமிழ் அறிஞர். பள்ளி ஆசிரியராகப் பணியாற்றிய இவர், பின்னர் நூலாசிரியர், பாவலர், பதிப்பாசிரியர், உரையாசிரியர், தொகுப்பாசிரியர், இதழாசிரியர், உரையாளர் எனப் பலபணிகளையும் செய்துள்ளார்.

தமிழ்வழிக் கல்விக்காகவும் குறளியக் கருத்துக்காகவும் குரல் கொடுத்து வந்தவர். தமிழகம் முழுவதும் திருக்குறள் உரைப்பொழிவுகள் வழங்கியும் திருமணங்களைத் தமிழ்வழியில் நடத்தியும் வந்தவர்.

திருச்சிக்கு அருகில் அல்லூரில் திருவள்ளுவர் தவச்சாலையும், பாவாணர் நூலகமும் அமைத்துள்ளார்.

# இரா. இளங்குமரன்

## (கட்டுரை)

## நூல்கள்:

திருக்குறள் கட்டுரைத் தொகுப்பு நூலை 1963-ஆம் ஆண்டு நேரு வெளியிட்டார்.
சங்க இலக்கிய வரிசையில் புறநானூறு என்னும் நூலை 2003-ஆம் ஆண்டு அப்துல் கலாம் வெளியிட்டார்.

### பதிப்பாசிரியர்

1975

| | | |
|---|---|---|
| 01. | இலக்கண வரலாறு | வரலாறு |
| 02. | காக்கைபாடினியம் | இலக்கணம் |
| 03. | எங்கும் பொழியும் இன்பத் தமிழ் | சமூகவாழ்வு |
| 04. | குண்டலகேசி | காவியம் (1127 பாடல்) |
| 05. | தமிழிசை இயக்கம் | வரலாறு |
| 06. | தனித்தமிழ் இயக்கம் | வரலாறு |
| 07. | திருக்குறள் தமிழ் மரபுரை | உரை |

2004

| | | |
|---|---|---|
| 08. | தேவநேயம் 13 தொகுதிகள் | ஆய்வு நூல் |



### உரையாசிரியர்

1975

| | | |
|---|---|---|
| 01. | நாலடியார் தெளிவுரை | இலக்கியம்- உரை |
| 02. | பாவாணர் வரலாறு | வரலாறு |
| 03. | யாப்பருங்கலம் | இலக்கணம் |
| 04. | புறத்திரட்டு | இலக்கணம் |
| 05. | செந்தமிழ்ச் சொற்பொருட் களஞ்சியம் | (10 தொகுதிகள்) |
| 06. | தென்னாட்டு வணிகம் | வரலாறு |
| 07. | திருக்குறளுக்கு உரை திருக்குறளே | ஆய்வு நூல் |
| 08. | 2009 திருக்குறள் (கருத்துரை) | உரை நூல் |
| 09. | 2006 உவமைவழி அறநெறி விளக்கம் | (3 தொகுதிகள்) ஆய்வு |

அகர முதல இலக்கிய பேரவை

# இரா. இளங்குமரன்

(கட்டுரை)

## நூல்கள்:

10. 2006 திரு.வி.க தமிழ்க்கொடை அறிமுகம் தொகுப்பு நூல்
11. 2006 திரு.வி.க முன்னுரைகள் தொகுப்பு நூல்
12. 2006 ஈழம் தந்த இனிய தமிழ்க்கொடை வரலாறு

இவருடைய நூல்கள் மதுரை பாரதி புத்தக நிலையம், திருநெல்வேலி தென்னிந்திய சைவசிந்தாந்த நூற்பதிப்புக்கழகம், சிதம்பரம் மணிவாசகர் பதிப்பகம், பாவாணர் அறக்கட்டளை, சேமமடு பதிப்பகம் ஆகியவற்றின் வாயிலாக வெளிவந்தன. இளங்குமரனார் நூல்கள் யாவும் இப்பொழுது கோ. இளவழகன் அவர்களின் தமிழ்மண் பதிப்பகம் வழியாக மறுபதிப்பும் செம்பதிப்புமாக வெளிவந்துள்ளன.

## விருதுகள்:

01. 1978-ல் நல்லாசிரியர் விருது
02. 1991-ல் ஈரோடு வேலா.ராசமாணிக்கத்தின் குரலியம் அமைப்பு இவருக்கு செந்தமிழ் அந்தனர் பட்டம் வழங்கியுள்ளது.
03. 1994-ல் தமிழக அரசின் திருவிக விருது
04. 1995-ல் மதுரை ஆடி வீதி திருவள்ளுவர் கழகம் சார்பில் திருக்குறள் செம்மல் விருது
05. 1996-ல் திருச்சி தமிழ் சங்க விருது
06. 1995-ல் திருச்சி மாவட்ட திருக்குறள் பேரவை சார்பில் குன்றக்குடி அடிகளார் வழங்கிய குறள் ஞாயிறு விருது
07. 1997 மதுரை புரட்சிக் கவிஞர் மன்றம் சார்பில் திராவிடர் கழக தலைவர் கி.வீரமணி வழங்கிய பெரியார் விருது
08. 1999-ல் சென்னை தமிழ் சான்றோர் பேரவை (நகலகம் அருணாசலம்) வழங்கிய மொழிப்போர் மறவர் விருது
09. 2000-ல் சென்னை கம்பன் கலகம் சார்பில் கம்பர் விருது வழங்கப்பட்டது.

# இரா. இளங்குமரன்

(கட்டுரை)

## விருதுகள்:

10. 2003-ல் பதிப்புச் செம்மல் மெய்யப்பன் வழங்கிய தமிழ் இயக்க செம்மல் விருது
11. 2004-ல் திருவாடுதுறை மடம் சிவப்பிரகாச அடிகளார் வழங்கிய திருக்குறள் செம்மல் விருது
12. 2004-ல் பழ.நெடுமாறன் வழங்கிய உலகப் பெருந்தமிழர் விருது
13. 2004-ல் மதுரை காமராசர் பல்கலைக்கழகம் வழங்கிய தமிழ் செம்மல் விருது
14. 2012-ல் பச்சமுத்து பைந்தமிழ் விருது-வாழ்நாள் சாதனையாளர் விருது, எஸ். ஆர். எம். பல்கலைக்கழகம்.
15. பாரதிதாசன் பல்கலைக் கழகம் இவருக்கு முதுமுனைவர் (D.Lit) பட்டம் வழங்கியுள்ளது.



## மறைவு

வயோதிகம் காரணமாக தனது 94வது வயதில் மதுரை திருநகரில் உள்ள தனது வீட்டில் 2021 சூலை 25 அன்று காலமானார்



அ. வில்சன், இதழாசிரியர்



அகர முதல
நாளை நமதே
அகர முதல
உரக்க சொல்வோம்
சொன்ன ஒரு சொல்
விடுபட்ட அம்பு
கடந்து போன வாழ்க்கை
நழுவ விட்டுவிட்ட சந்தர்ப்பம் – ஆகிய நான்கும்
மீண்டும் திரும்ப வராது.
Aagaramuthalaa
www.அகரமுதல.com

அகமும் தமிழே! முதலும் தமிழே!!

"தனித்தியங்கும் தன்மை தமிழினுக் குண்டு
தமிழே ஞாலத்தில் தாய்மொழி பண்டு
கனிச்சாறு போற்பல நூலெலாம் கண்டு
காத்ததும் அளித்ததும் தமிழ்செய்த தொண்டு"

என்றும் தலைப்பணியாம் தமிழ்ப்பணியில்,

அகர முதல செய்திக்குழு | அகர முதல இலக்கிய பேரவை
அகர முதல கல்விக்குழு | சிவம் அறக்கட்டளை.


தொடர்பிற்கு:

9597887847/8870884969

www.அகரமுதல.com

Aagaramuthalaa

aagaramuthala@gmail.com